**செய்தி வெளியீடு எண்: 212** **நாள்: 26.03.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (26.3.2018) நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ஆற்றிய உரை**

---

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, கொங்கணாபாளையம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பள்ளிபாளையம்–எஸ்.பி.பி. காலனி புதிய இரயில்வே மேம்பாலம் திறப்பு விழா, வெப்படை புதிய காவல் நிலையம் துவக்க விழா, காவேரி ஆர்.எஸ்–ல் கீழ்ப்பாலம் அடிக்கல் நாட்டு விழா மற்றும் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள மேம்பாலப் பணிகள் திறப்பு விழா நிகழ்ச்சியில் தலைமையேற்று தலைமையுரை ஆற்றிய இந்தத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய திரு.பி.தங்கமணி அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய திரு கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே,

நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்புரையாற்றி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய சரோஜா அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்களே,

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. விஜயபாஸ்கர் அவர்களே,

இந்த நிகழ்ச்சியிலே வரவேற்புரை ஆற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே,

சிறப்புரை ஆற்றிய ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் திரு செல்வக்குமார் சின்னையன் அவர்களே மற்றும்

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று காலத்தினுடைய நேரம் கருதி எங்களுக்கு பேசுவதற்கு வழிவிட்டு அமர்ந்திருக்கின்ற நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பி.ஆர். சுந்தரம் அவர்களே மற்றும்

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாமக்கல் சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.டி.பாஸ்கர் அவர்களே, சேந்தமங்கலம் சட்டப்பேரவை உறுப்பினர் திரு.சந்திரசேகரன் அவர்களே, திருச்செங்கோடு சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரி பொன் சரஸ்வதி அவர்களே,

மரியாதைக்குரிய சட்டப்பேரவை உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திரு.கே.வி.ராமலிங்கம் அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய கே.எஸ்.தென்னரசு அவர்களே மற்றும் நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற தென்னக இரயில்வே கோட்ட மேலாளர் அவர்களே,

நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற, மேடையிலே வீற்றிருக்கின்ற முன்னோடி நிர்வாகிகளே, அரசு அலுவலர்களே, வருகை தந்துள்ள கழகத்தினுடைய அனைத்துமட்ட நிர்வாகிகளே,

பெரியோர்களே, தாய்மார்களே, முன்னாள் உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளே, கூட்டுறவு சங்க நிர்வாகிகளே மற்றும் இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நெடுஞ்சாலைத் திட்டங்களினுடைய தலைமைப் பொறியாளர் அவர்களே, உங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து,

இன்றையதினம் நாமக்கல் மாவட்டம் முழுவதையும் ஒரு வளர்ச்சியடைந்த மாவட்டமாக பார்க்கின்றோம். எனக்கு முன்னாலே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களும், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய சரோஜா அவர்களும், இந்த மாவட்டத்தில் என்னென்ன பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று அழகாக எடுத்துச் சொன்னார்கள்.

இதற்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிருந்த காலத்தில் இந்த மாவட்டம் எப்படி இருந்தது, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011–ல் பதவியேற்ற பிறகு, இந்த மாவட்டத்தில் எவ்வளவு வளர்ச்சியை பார்க்கமுடிகிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு ஆட்சி எப்படி நடைபெறுகிறது என்பதை தராசு போல் நீங்கள் நிறுத்திப் பார்த்தால்தான், எந்த ஆட்சியில் மக்களுக்கு நன்மை கிடைக்கின்றது என்பதை நீங்கள் ஊர்ஜிதம் செய்யமுடியும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருந்த காலத்தில் இந்த மாவட்டம் ஒரு வளர்ச்சியடைந்த மாவட்டம், தொழில் நிறைந்த மாவட்டமாக இருந்த காரணத்தினால், மேலும் வளர்ச்சி காண வேண்டுமென்பதற்காக, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு சிந்தித்துதான், இங்கே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர், மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர், சட்டப்பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றுகின்றவிதமாக இன்றைக்கு பல்வேறு மேம்பாலங்களை இந்த மாவட்டத்திற்கு அளித்து, அந்தப் பாலப்பணிகள் சிறப்பாக நிறைவு பெற்று, திறப்பு விழா நடத்தி, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்திருக்கின்றோம்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு.தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இங்கே திருச்செங்கோட்டை மையமாக வைத்துக்கொண்டால், திருச்செங்கோட்டிலிருந்து எல்லாப் பகுதிகளுக்குமே, நான்கு வழிச்சாலை கிடைத்த ஒரே மாவட்டம் தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டம் தான், வேறு எந்த மாவட்டத்திற்கும் கிடைக்கவில்லை. இன்றைக்கு திருச்செங்கோட்டிலிருந்து ஈரோடு வரைக்கும் நான்கு வழிச்சாலை அமைத்திருக்கின்றோம். திருச்செங்கோட்டிலிருந்து பரமத்தி வரைக்கும் ஏற்கனவே பணிகள் முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது. இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாநில நிதியிலிருந்து முழுவதும் செலவு செய்யப்பட்டு, திருச்செங்கோட்டிலிருந்து நாமக்கல் வரை நான்கு வழிச்சாலையை மக்களின் பயன்பாட்டிற்குக் கொடுத்திருக்கின்றார்கள். அதேபோல, திருச்செங்கோட்டிலிருந்து ராசிபுரம் மல்லிக்கரை வரை சாலைகள் விரிவுபடுத்தும் பணி இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆக, திருச்செங்கோட்டை மையமாக வைத்துப் பார்க்கின்றபொழுது, இன்றைக்கு மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில்தான் சாலைகள் விரிவாக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும், இப்பொழுது திருச்செங்கோட்டிலிருந்து சங்ககிரி, சங்ககிரியிலிருந்து கொங்கணாபுரம், தாரமங்கலம், ஓமலூர் வரைக்கும் நான்கு வழிச்சாலை அமைக்கும் பணி விரைவிலே தொடங்கப்படும். திருச்செங்கோட்டிலிருந்து செல்லுகின்ற சாலைகள் அனைத்துமே விரிவுபடுத்தப்பட்டுவிட்டது. தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்களில், எங்குமில்லாத ஒரு சிறப்பு இந்த நாமக்கல் மாவட்டத்திற்கு கிடைத்திருக்கின்றது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல, திருச்செங்கோட்டிலே புறவழிச்சாலை பணி துவங்குவதற்கு நிலஎடுப்புப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நாமக்கல் புறவழிச்சாலை, இராசிபுரத்தில் புறவழிச்சாலை – ஒரு பணி நிறைவு பெற்றது. இரண்டாவது கட்டப் பணி நடைப்பெற்று கொண்டிருக்கின்றது. இப்பணிகளெல்லாம் விரைவிலே நிறைவேற்றப்படும். ஆக, உட்கட்டமைப்பு வசதிகள் மூலமாக போக்குவரத்து அதிகமுள்ள இந்த மாவட்டத்தில் தங்குதடையில்லாமல் போக்குவரத்து செல்வதற்கு தேவையான சாலைவசதிகளை அம்மாவினுடைய அரசு செய்து கொடுத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் மேட்டூர் கிழக்குக்கரை, மேற்குக்கரை என இரண்டு கால்வாய்கள் இருக்கின்றன. அந்த இரண்டு கால்வாய்களின் வழியாக நம்முடைய விவசாய குடிமக்களுக்குத் தேவையான நீர் வழங்கப்பட்டு, வேளாண் பெருமக்கள் பயன்பெறுகின்றவிதத்திலே, அந்த இரண்டு கால்வாய்களும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேட்டூரிலிருந்து திறந்துவிடப்படுகின்ற நீர் சேதாரம் இல்லாமல், கடைக்கோட்டுப் பகுதியாக இருக்கின்ற பள்ளிபாளையம் கடைசிமுனை வரைக்கும் செல்வதற்காக அந்தக் கால்வாயில் கான்கிரீட் சாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து, செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். நான்கு நாட்களுக்கு முன்பு ரூபாய் 48 கோடி sanction செய்யப்பட்டு இன்னும் ஒரு 15 நாளில் டெண்டர் விடுவதற்கு இருக்கிறோம். நம்முடைய மேட்டூர் கிழக்குக் கரை கால்வாயை நவீன முறையில் கான்கிரீட் கால்வாயாக மாற்றி அமைக்கின்றபொழுது, திறந்துவிடப்படுகின்ற நீர் சேதாரம் இல்லாமல் கடைக்கோடியிலிருக்கின்ற விவசாயிகளுக்கும் தண்ணீர் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்ள இந்த நேரத்திலே கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தப் பகுதி, விசைத்தறி, கைத்தறி தொழில்கள் நிறைந்த பகுதி. இரண்டு தொழில்களும் சிறக்க வேண்டுமென்பதற்காக விலையில்லா மின்சாரம் கொடுத்த ஒரே அரசு, அம்மாவினுடைய அரசு என்று பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தப் பகுதிகளிலெல்லாம் மின்சாரம் இருந்தால்தான் தொழிலே செய்யமுடியும்.

வேளாண்மைக்கு நீர், உடலுக்கு உயிர் எப்படியோ, அதுபோல தொழிலுக்கு உயிராய் இருப்பது மின்சாரம். வேளாண்மைக்கு உயிராய் இருப்பது நீர். தொழிலுக்கு தேவையான மின்சாரம் தேவை. மின்சாரம் முடங்கினால் இந்த மாவட்டமே நசிந்து போய்விடும். தொழிலில்லாத மாவட்டமாய் மாறிவிடும். ஏனென்றால், விசைத்தறி நிறைந்த பகுதி, ஸ்பின்னிங் மில் நிறைந்த

பகுதி. கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எப்பொழுது கரெண்ட் வரும், எப்பொழுது போகும் என்றே தெரியாது. அப்படி கடுமையான மின்வெட்டு இருந்த காலம். 2006–லிருந்து 2011 வரைக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் தேர்தல் நேரத்தில் சுற்றுப்பயணம் செல்கின்றபொழுது சொன்னார்கள், நான் முதலமைச்சராகி மூன்றே ஆண்டுகளில் தமிழகத்தில் மின்வெட்டு இல்லாத மாநிலமாக உருவாக்கிக் காட்டுவேன் என்று சட்டமன்றத்திலே சொன்னார்கள். அதேபோல மூன்றே ஆண்டுகளில் தன்னுடைய திறமையால், அறிவாற்றலால் வாரந்தோறும் மின்சாரத் துறை அதிகாரிகளை அழைத்துப்பேசி நடவடிக்கை எடுத்து, தமிழகத்தில் மின்வெட்டு இல்லாத மாநிலமாக உருவாக்கித் தந்த பெருமை அம்மாவைச் சாரும். இன்றைக்கு அந்தத் துறையினுடைய அமைச்சராக இந்தத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் மாண்புமிகு அமைச்சர் தங்கமணி இருந்து கொண்டிருக்கின்றார். ஆகவே, இந்தத் துறையில் இன்னும் கூடுதலான மின்சாரத்தை உற்பத்தி செய்து, இனி எந்தக் காலத்திலும் தமிழகத்தில் மின்வெட்டு இல்லாத மாநிலமாக உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் காரணமாகத்தான் உடன்குடி மின்திட்டத்திற்குக்கூட அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. புதிய, புதிய மின்திட்டம் உருவாக்குவதன் மூலமாக, தமிழக மக்களுக்கு தேவையான மின்சார வசதி செய்து கொடுப்பதன் மூலமாக, தொழில் வளம் பெருகும், தொழில்வளம் பெருகுகின்றபொழுது, மக்களிடத்திலே பொருளாதார மேம்பாடு அடையும். எனவே, இப்படி ஒரு தொலைநேநக்கு சிந்தனையோடு அம்மாவால் போடப்பட்ட திட்டத்தை அம்மாவினுடைய அரசு இன்றைக்கு நடைமுறைப்படுத்திக் காட்டியிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றைக்கு திருச்செங்கோட்டிலிருந்து சேலம் செல்லும்பொழுது அரியானூர் ஜங்ஷனில் அடிக்கடி விபத்து ஏற்பட்டு பலபேர் உயிரிழக்க நேரிடுவதை கருத்தில் கொண்டு அங்கே ஒரு மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று கருதி, இன்னும் 2 மாதத்தில் அங்கே ஒரு மேம்பாலம் அமைக்கின்ற பணியும் துவக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். திருச்செங்கோட்டிலிருந்து அதிகமான போக்குவரத்து செல்கின்ற பகுதி, திருச்செங்கோடு, ஆட்டையாம்பட்டி, அரியானூரில் சேர்ந்து சேலம் செல்கிறது. அங்கே தேசிய நெடுஞ்சாலை இணைகின்றபொழுது, அதிகமான விபத்து ஏற்படுகிறது. அந்த விபத்துக்களை தவிர்ப்பதற்காக அங்கே ஒரு உயர்மட்டப் பாலம் கட்டப்படும். மாண்புமிகு உங்களுடைய அமைச்சர் அவர்கள் சங்ககிரியிலிருந்து குமாரபாளையம் வருகின்ற தேசிய நெடுஞ்சாலையில், அத்தனூர் பிரிவு ரோடு, அங்கே ஒரு உயர்மட்ட பாலம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள், அங்கேயும் ஒரு உயர்மட்டப்

பாலம் கட்டிக் கொடுப்பதற்காக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கு முன்னாலே சென்னையிலிருந்து வருகின்றபொழுது தேசிய நெடுஞ்சாலையில் கொங்கு கல்யாண மண்டபம் பக்கத்தில், குமாரபாளையம் நகரத்திற்கு செல்கின்ற பிரிவு பாதையில், ஒரு உயர்மட்டப் பாலம் கேட்டிருக்கின்றார்கள். அங்கேயும் உயர்மட்ட பாலம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அத்தனூரில் ஒரு ரயில்வே மேம்பாலம் வேண்டுமென்று கேட்டார்கள். ரயில்வே மேம்பாலம் வேண்டுமென்று சொன்னால், ஒரு நாளைக்கு அங்கு ரயில் போவதை கணக்கிட்டு, ரயில் போகும்பொழுது கதவுகள் மூடப்படும் நேரத்தில் இரண்டு பக்கங்களிலும் நிற்கின்ற வாகனங்களை கணக்கிட்டு, 1 லட்சம் இரயில்வே அலகுகள் இருந்தால்தான், மத்திய அரசு அதற்கு அனுமதி கொடுக்கும். ஆகவே, அந்த கணக்கீட்டை மத்திய அரசாங்கம் செய்யும், மத்திய அரசாங்கத்தின் மூலமாக கணக்கீடு செய்து 1 லட்சம் இரயில்வே அலகுகள் வந்தால், அங்கே ஒரு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு மத்திய அரசின் அனுமதி பெற்று கட்டித்தரப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். ஆகவே, அம்மாவினுடைய அரசுதான் இவ்வளவு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகின்றது. விவசாய பெருங்குடி மக்களுக்கு தேவையான நீரைப் பெருவதற்கு அம்மாவினுடைய அரசு சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்து வருகிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப்போல் தட்டிக் கழிப்பது கிடையாது. இன்றைக்கு பெருந்துறையில் மண்டல மாநாடு ஒன்றை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்தினார்கள். அப்பொழுது, அங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக செயல்தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார், இந்த ஆட்சியை நாங்கள் நினைத்தால் சொடக்கு போடுகிற நேரத்தில் வீட்டிற்கு அனுப்புவோம் என்று சொன்னார். ஆகவே, அவருடைய எண்ணமெல்லாம், இந்த ஆட்சியை கலைப்பதில்தான் இருக்கிறதேயொழிய, நாட்டு மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற எண்ணம் துளிகூட கிடையாது. என்றைக்கு நாங்கள் பதிவியேற்றோமோ, அன்றிலிருந்து இதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார். பதவி ஏற்கும்பொழுது என்ன சொன்னார்? பட்ஜெட் போடும் வரை இந்த ஆட்சி தாக்குபிடிக்காது என்று சொன்னார், பட்ஜெட் போட்டு முடித்துவிட்டோம், அதற்குப் பிறகு, மானியக் கோரிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்தது, அந்த மானியக் கோரிக்கை முடியும் வரை இந்த ஆட்சி தாக்கு பிடிக்குமா என்று சொன்னார். அதையும் நாங்கள் நடத்திக் காட்டினோம். அதற்குப் பிறகு, மூன்று மாதம் இந்த ஆட்சி தாக்குபிடிக்காது என்று சொன்னார், அதையும் தாண்டி இன்றைக்கு மக்கள் துணையோடு வெற்றிகரமாக ஓராண்டை நிறைவு செய்திருக்கிறோம்,

இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். இன்றைக்கு சொடக்கு போட்டு எல்லாம் இந்த ஆட்சியை கவிழ்த்து விடமுடியாது. ஏனென்றால், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், இருபெரும் தலைவர்கள் தெய்வசக்தி படைத்த இயக்கத்திற்கு துணையாக நின்று இயக்கிக் கொண்டிருக்கின்றார்கள். அந்த தெய்வசக்தி எங்களுடன் இருக்கும்வரை, அவர்கள் ஆசி எங்களுடன் இருக்கின்றவரை, உங்களைப்போல் எத்தனை எதிர்க்கட்சிகள் எதிர்த்தாலும் அதை தவிடுபொடியாக்குவோம் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, எவ்வளவு சோதனைகள் வந்தாலும், அந்த சோதனைகளையெல்லாம் மக்கள் துணைகொண்டு நாங்கள் வெற்றிபெறுவோம். ஏனென்றால், மக்களுக்கு தேவையான திட்டங்களை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது, எதிலும் சோடை போகவில்லை.

இன்றைக்கு இந்தியாவிலேயே உணவுதானிய உற்பத்தி அதிக விளைச்சல் பெற்று, கிருஷி கர்மான் விருதை **2015–2016**–க்கு நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் டெல்லி சென்று, பாரதப் பிரதமரிடத்தில், கடந்த வாரத்தில் பரிசு பெற்று வந்திருக்கிறார். எனவே, வேளாண்மைத் துறையானாலும் சரி, எந்தத் துறையானாலும் சரி, அத்தனை துறையும் இன்றைக்கு வளர்ச்சிப் பாதையிலே சென்று கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, உங்களுடைய அரசு, ஏழை, எளிய மக்களுடைய அரசு, ஏழை மக்களுக்கு என்ன இல்லை என்பதை கண்டறிந்த அரசு. ஏனென்றால், நாங்களெல்லாம் சாதாரண மக்களோடு பழகி இந்த நிலைக்கு உயர்ந்திருக்கின்றோம். சாதாரண அடித்தட்டிலே இருக்கின்ற மக்களுக்கு என்ன துன்பம் இருக்கும் என்பதை நாங்கள் உணர்ந்திருக்கின்றோம். அதை எப்படி களைவது, எப்படி நிவர்த்தி செய்வது என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்களைப்போல் செல்வாக்கில் இருந்து கொண்டு வெற்றி பெற்று அமைச்சராகவில்லை. எங்களைப் பொறுத்தவரைக்கும், கடினமாக உழைப்பால், விசுவாசத்தால் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கின்றோம். விசுவாசமும், உழைப்பும் எங்கிருந்தாலும் வெற்றி கிடைக்கும். ஆகவே, அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும், மக்களுக்கு உழைக்கக்கூடிய அரசாக இருக்கும். மக்களுக்குத் தேவையான திட்டங்களை மக்களுக்கு சென்றடையக்கூடிய அளவிற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்படும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த மேம்பால திறப்புவிழா நிகழ்ச்சி, காவல்நிலைய திறப்பு விழா நிகழ்ச்சி, கீழ்ப்பாலம் அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து, இந்த பகுதிக்கு வருகின்ற பொழுது, இந்த தொகுதியில் இருக்கின்ற அனைத்து மக்களும் பள்ளிக்கூடத்திலே வந்து

குவிந்துவிட்டார்கள் என்று கருதுகின்ற அளவுக்கு மக்கள் வெள்ளம் கடல்போல காட்சியளிக்கின்றார்கள். அப்படிப்பட்ட இந்த செல்வாக்கு மிக்க தொகுதி இன்னும் பல திட்டங்கள் அம்மாவினுடைய அரசிலிருந்து கிடைக்கப் பெற்று, மேலும், மேலும் இந்தப் பகுதி மக்கள் அம்மாவினுடைய அரசிற்கு துணை நிற்பார்கள் என்று சொல்லி வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி.

வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**